புதுச்சேரி அரசு
துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2021** **28 ஏப்ரல், 2021**

# பத்திரிகை செய்தி

புதுச்சேரியில் கொரோனாவுக்கு எதிரான போரில் தனியார் தொழில் நிறுவனங்கள் அரசுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்ற அரசின் வேண்டுகோளை ஏற்று சமூகப் பொறுப்புணர்வுத் திட்டத்தின்கீழ் தனியார் நிறுவனங்கள் பல்வேறு வகையிலும் உதவிகள் செய்து வருகின்றன.

புதுச்சேரியில், வெண்டிலேட்டர் கருவிகள் தயாரிக்கும் ஷில்லர் நிறுவனம் 10 கருவிகளை அரசுக்கு தர இசைவு தெரிவித்து, அதன் ஒரு பகுதியாக இந்திரா காந்தி மருத்துவக் கல்லூரியின் பயன்பாட்டிற்காக இரண்டு வெண்டிலேட்டர் கருவிகளை இன்று(28-04-2021) சுகாதாரத்துறைக்கு வழங்கியது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் முன்னிலையில் ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், துணைநிலை ஆளுநரின் ஆலோசகர்கள் டாக்டர் C சந்திரமௌலி, டாக்டர் A. P மகேஸ்வரி, தலைமைச் செயலர் திரு அஸ்வனி குமார், சுகாதாரத்துறைச் செயலர் திரு அருண், துணைநிலை ஆளுநரின் செயலர் திரு அபிஜித் விஜய் சௌதிரி சுகாதாரத்துறை இயக்குநர் டாக்டர் மோகன் குமார், மாநில சுகாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு ஸ்ரீராமலு ஆகியோர் கலந்து கொண்டனர். துணைநிலை ஆளுநர், சுகாதாரத்துறைக்கு வெண்டிலேட்டர் கருவிகள் தந்துதவ முன்வந்த ஷில்லர் நிறுவனத்திற்கு நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்தார்.

அப்போது பத்திரிகையாளர்களிடம் பேசிய துணைநிலை ஆளுநர்,

- ”அரசின் வேண்டுகோளை ஏற்று பல்வேறு தொழில் நிறுவனங்கள் உதவி செய்து வருகின்றன. மக்களின் நலம், பாதுகாப்பு கருதி இன்னும் உதவிகள் செய்ய முன்வர வேண்டும்.
- பிராணவாயு படுக்கைகள், மருந்துகள், வெண்டிலேட்டர் கருவிகள் போதுமான அளவு இருக்கின்றன. எந்த தட்டுபாடும் இல்லை. அதனால் மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. 80-90 விழுக்காடு மக்கள் வீட்டில் இருந்தபடியே சிகிச்சை எடுத்துக் கொள்ளலாம். 2 அல்லது 3 விழுக்காடு நோயாளிகளுக்கு மட்டுமே வெண்டிலேட்டர் கருவிகள் தேவைப்படும்.
- வாக்கு எண்ணிக்கை நாட்களில் மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கக் கூடாது. அதுவே தொற்றுக்கு வழிவகுத்துவிடும் என்று தேர்தல் ஆணையமும் சென்னை உயர்நீதி மன்றமும் அறிவுறுத்தி உள்ளதால், புதுச்சேரியில் 30 ஆம் தேதி வரை அறிவிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் மே மாதம் 3-ஆம் தேதி வரை நீட்டிக்கப்படுகிறது.

- தேர்தல் முடிவுகளுக்குப்பின் எவ்வித கூட்டமும் கொண்டாட்டமும் இருக்கக் கூடாது என்பதற்காகத் தான் இந்த கட்டுப்பாடுகள். எனவே, பொதுமக்கள் தயாராக இருக்க வேண்டும. எந்தெந்த கடைகள் திறந்திருக்க வேண்டும் என்பது பற்றி நடைமுறையில் உள்ள கட்டுப்பாடுகளே தொடரும்.
- அரசியல் கட்சிகள், பொது மக்களுக்கு இடையுறும் இல்லாமல் வாக்கு எண்ணிக்கை நடைமுறைகளில் பங்கேற்க வேண்டும். தனியார் நிறுவனங்களைப் போலவே அரசியல கட்சிகளும் மக்களுக்கு உதவ முன்வர வேண்டும்.
- மக்கள் அத்தியாவசியத் தேவைகளுக்காக வெளியே வர கட்டுப்பாடு இல்லை. ஆனால் கூட்டம் கூடுதலைத் தவிரக்க வேண்டும். பாதுகாப்புக் கருதி வீட்டில் இருக்கும் போதும் முகக்கவசம் அணிந்து கொள்ள வேண்டும். மக்கள் சமூக அக்கறையோடு செயல்படுகிறார்கள. அவர்களை நான் பாராட்டுகிறேன்.
- அனைத்து தனியார் மருத்துவமனைகளிலும் கொரோனா பரிசோதனை செய்வதற்கான கட்டணத்தை அரசு ஏற்கனவே குறைத்திருக்கிறது. அதே போல அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பரிசோதனைகள் நடைபெற்று வருகின்றன.
- ஏழைகளுக்கு வழங்கப்படும் மலிவு விலை உணவின் விலை ஏற்கனவே 10 ரூபாயிலிருந்து 5 ரூபாயாக குறைக்கப்பட்டிருகிறது. இந்த நடைமுறையை விரிவு படுத்துவது குறித்து அரசு ஊத்தேசித்து வருகிறது.
- முந்தைய காலத்தில் வாங்கப்பட்ட சில வெண்டிலேட்டர் கருவிகளை சரிசெய்யும் முயற்சி நடைபெற்று வருகிறது. இன்று 11 வெண்டிலேட்டர் கருவிகள் சரி செய்யப்பட்டு இருக்கின்றன. மீதமுள்ளவையும் சரிசெய்யப்படும். முகக் கவசம் அணியாதவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து அறிக்கை கேட்கப்பட்டுள்ளது.” என்று கூறினார்.